இப்போது பல ஆண்டுகள் இடைவெளி கடந்த பிறகு பல தனிப்பட்டவர்கள் அந்த நிலங்களை அனுபவிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம். பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவர் அனுபவித்தாலே அவர்களுக்குச் சொந்தம் என்ற நிலையில், பல நூற்றாண்டுகள் கடந்துபோன பிறகு நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. இவற்றை எல்லாம் வரலாற்றுக் குறிப்புகள் என்ற அளவுக்குத் தான் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சுப்பிரமணியபுரத்துக்கு உதவிப் பதிவு அலுவலகம்

***750 வினா—திரு. சி. இராமநாதன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அறந்தாங்கி வட்டாரத்தில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் சப்-ரிஜிஸ்தரார் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அறந்தாங்கி வட்டாரத்தில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் உதவிப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.

திரு. சி. இராமநாதன் : அது இந்த ஆண்டில் ஏற்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அது பற்றித்தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை முடிந்த பிறகு ஆவன செய்யப்படும்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: திண்டுக்கல் வட்டம், சின்னாளப் பட்டியில் பத்திரப் பதிவு அலுவலகம் இல்லை. அதனால் அந்தப் பகுதி மக்கள் திண்டுக்கல் அல்லது ஆத்தூருக்கு எமெட்டு மைல் தூரம் சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு பத்திரப் பதிவுக் காரியாலயம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நிதி வசதிக்கு ஏற்றபடி கனம் உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலனை செய்து நிறைவேற்றும்.